20.02.2020 அன்று நடைபெற்ற அவசரக் கூட்டம்

மன்றப்பொருள்..1

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020-ன் கீழ் செங்கோட்டை நகராட்சி பகுதியில் உள்ள கே.டி.சி.டிப்போவில் கழிவறை அமைக்கும் பணி மேற்கொள்ள தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ8/5044/2019 நாள். 22.01.2020-ல் நிர்வாக அனுமதி மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும், மேலும், மேற்படி பணியினை மேற்கொள்ள 28.01.2020 அன்று ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு வழங்கப்பட்டு, 14.02.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம்

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்தக்காரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கோட்டை நகராட்சி பகுதியிலுள்ள கே.டி.சி.,பேருந்து டிப்போவில் கழிவறை அமைத்தல் | ரூ. 8.55 (லட்சம்) | திரு.தா.ஆபேல்ஜெயசீலன் | 0.03% மதிப்பீட்டை விட குறைவு |
| | | | திரு.எஸ்.பரமசிவன் | 0.21% மதிப்பீட்டை விட கூடுதல் |

அலுவலககுறிப்பு..

1. தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.அ8/5044/2019 நாள். 22.01.2020 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.
2. பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த பட்ச விலைவிகிதமாக 0.03% மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திரு.தா.ஆபேல்ஜெயசீலன் என்பவரது ஒப்பந்தப்புள்ளிக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண். 207 அலுவலக குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.**

மன்றப்பொருள்..2

இந்நகராட்சி வார்டு எண். 24. காந்திரோடு கதவு எண். 159/43, 169/45,169/46, 167/49 வரிவிதிப்பு எண்கள் 14879, 14880, 14882, 14883 ஆகிய கட்டிடங்களை இடித்து விட்டு செங்கோட்டை தஞ்சாவூர் தெரு, மஸ்திதூன் நூர் ஜும்ஆ பள்ளிவாசல் கூடுதல் கட்டிடங்கள் கட்ட இவ்வலுவலக கட்டிட உரிமையாணை எண். 178/2005 நாள். 30.08.2005ல் கட்டிட அனுமதி வழங்கப்பட்டு இந்நகராட்சி நகர்மன்ற தீர்மான எண். 58/18.03.2015 அன்று பள்ளிவாசல் கடைகள் அப்புறப்படுத்தப்பட்டு பள்ளிவாசல் விரிவுபடுத்தப்பட்ட நிலையில் மேற்கண்ட கதவு எண்கள் கொண்ட கட்டிடமானது பள்ளிவாசல் கட்டிடமாக மாறி உள்ளது. எனவே, மேற்படி கட்டிடத்திற்கு வரிவிலக்கு அளித்திட மன்றம் அனுமதி வழங்கப்பட்டது.

மேலும் 2007-2008 முதலாம் அரையாண்டு முதல் 2015-2015 இரண்டாம் அரையாண்டு வரை ரூ. 66652/-ஐ வஜா செய்திட 18.03.2015ல் மன்ற தீர்மான எண். 58ன்படி

அனுமதி வழங்கப்பட்டது, ஆனால் கணினியில் நீக்கம் செய்யப்படாமல் நாளது தேதி வரை கீழ்க்காணும் விவரப்படி நிலுவையாக இருந்து வருகிறது.

| வ. எண் | வரி விதிப்பு எண் | நீக்கம் செய்ய வேண்டிய வருடம் | நீக்கம் செய்ய வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1 | 144/14879 | 2008-2009 முதலாம் அரையாண்டு முதல் 2019-2020 இரண்டாம் அரையாண்டு வரை | ரூ. 28458/- |
| 2 | 144/14880 | 2008-2009 முதலாம் அரையாண்டு முதல் 2019-2020 இரண்டாம் அரையாண்டு வரை | ரூ. 28458/ |
| 3 | 144/14882 | 2008-2009 முதலாம் அரையாண்டு முதல் 2019-2020 இரண்டாம் அரையாண்டு வரை | ரூ. 28458/ |
| 4 | 144/14883 | 2008-2009 முதலாம் அரையாண்டு முதல் 2019-2020 இரண்டாம் அரையாண்டு வரை | ரூ. 28458/ |
| மொத்தம் | | | ரூ. 113832/- |

மேற்படி தொகையினை வசூல் செய்வதற்கு மார்க்கல்லை என்பதால் ரூ. 113832/- நீக்கம் செய்திடவும் மேலும் வரி விலக்கு அளித்திட மன்றத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

அலுவலக்குறிப்பு..

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி தொகையினை வஜா செய்ய மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

தீர்மானம் எண். 208 அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..3

இந்நகராட்சி வார்டு எண். 02 சுப்பிரமணியன் தெரு, கதவு எண்.2எ, வரிவிதிப்பு எண் 931 கொண்ட சொத்துவரி விதிப்பிற்கான தொகை 1994-1995 இரண்டாம் அரையாண்டு முதல் 2018-2020 இரண்டாம் அரையாண்டு வரை ரூ.15402/-நிலுவை உள்ளது. அதனை வஜா செய்வதற்கு வழக்கு எண். 38/92, நாள் 30.06.1983 மற்றும் மேல்முறையீட்டு வழக்கு எண். 76/93 நாள். 28.02.1997 படி வரிவிதிப்பாளருக்கு விதிக்கப்பட்ட வரியை வசூல் செய்யவோ நடவடிக்கைகள் மேற்கொள்ளவோ கூடாது என உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது இதனை அடிப்படையாக கொண்டு செங்கோட்டை நகராட்சி மன்ற தீர்மான எண். 116 நாள். 31.07.2017 படி மேற்படி தொகையினை வஜா செய்வதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டு உள்ளது ஆனால் அன்றைய தேதில் வசூல் மையம் முழுவதுமாக Online (CFC) செய்யப்பட்டதை தொடர்ந்து மேற்படி வரிவிதிப்பினை ரத்து செய்ய இயலவில்லை எனவே, வரிவிதிப்பு எண்.931க்கு 1994-1995 இரண்டாம் அரையாண்டு முதல் 2019-2020 இரண்டாம் அரையாண்டு வரை உள்ள நிலுவைத் தொகை ரூ. 15402/- ஐ நீதிமன்ற தீர்ப்பினை செயல்படுத்தும் விதமாகநடப்பு ஆண்டு வரை கேட்பு எழுப்பப்பட்ட நிலையில் (வஜா) நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டுப்படுகிறது.

அலுவலக குறிப்பு.

1. மன்றம் அனுதி வழங்கலாம்.
2. மேற்படி தொகையினை வஜா செய்ய மன்ற ஒப்புதல் வழங்கலாம்.

3. மேற்படி வரி விதிப்புகளை ரத்து செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 209 அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..4

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதத்தில் இந்திய செஞ்சிலுவை சங்கத்துக்கு 2016-2017 முதல் 2019-2020 வரை சந்தா தொகையாக வருடம் ஒன்றுக்கு நகராட்சிக்கு ரூ. 2500/- வீதம் மொத்தம் நான்கு ஆண்டுகளுக்கு ரூ.10,000/- செலுத்திட நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் கடிதம் ந.க.எண்.2886/2019/அ4, நாள். 30.12.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து மேற்படி செலவினத்தொகையினை வருவாய் மற்றும் மூலதனநிதியிலிருந்து செலவிட மன்றத்திங்ன அனுமதிவேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு..

மன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானம் எண். 210 அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..5

செங்கோட்டை நகராட்சிக்கு பசுமை நுண்ணுயிர் உரக்குடில்கள் (Micro Compost Centre) மூன்று எண்ணம் அனுமதிக்கப்பட்டு, தற்போது மூன்று எண்ணம் செயல்பட்டுக் கொண்டு உள்ளது. மேலும், மண்புழு உரமும் சிறிய அளவில் தயார் செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

நகராட்சிகளில் தயார் செய்யப்படும் உரத்தை அரசாணை எண்.210 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை நாள். 21.06.2002ல் விவசாயிகளுக்கு இலவசமாகவே வழங்கிட உத்திரவிடப்பட்டுள்ளது. மேலும், சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் சுற்றறிக்கை ந.க.எண். 19396/201/பி3, நாள். 23.01.2019ல் உரம் விற்பனை செய்யப்படும் போது மேற்படி தொகையை சம்பந்தப்பட்ட துப்புரவு பணியாளர்களுக்கே வழங்கிடவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன்படி, இந்நகராட்சியில் செப்டம்பர் 2019 முதல் தயார் செய்யப்பட்டு வரும் உரத்தை சேமிக்க இயலாத சூழ்நிலையில் தேக்க நிலையைத் தவிர்த்திட விவசாயிகளுக்கு இலவசமாக கொடுக்கவும், மற்றும் உரம் வேண்டும் என்று அதிகமாக கேட்டு வரும் நேர்வுகளில் சூழ்நிலைக்கேற்ப துப்புரவு ஆய்வாளர்களே முடிவு செய்து உரத்தை ஒரு கிலோவிற்கு விலை ரூபாய் ஒன்று என விற்பனை செய்யவும், மேற்படி தொகையினை துப்புரவு பணியாளர்களுக்கே வழங்கிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு.

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 211 அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்.. 6

செங்கோட்டை நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு 2015-16-ம் ஆண்டில் காலணி வாங்கி வழங்கப்பட்டுள்ளது. தற்போது 18 ஆண் துப்புரவு பணியாளர்களும், 2 பெண் துப்புரவு பணியாளர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களுக்கு அம்பாசமுத்திரம் சர்வோதய சங்கம் மூலம் காலணிகள் வாங்கி வழங்கவும், அதற்கான செலவினம் ரூ. 15000/-க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

மன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண். 212 அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..7

சென்னை நகர்நிர்வாக கட்ட சங்கத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கான கட்டிட நிதி நான்காவது தவணைத்தொகையாக இரண்டாம் நிலை நகராட்சிக்கு ரூ. 1,63,638/- பங்குத் தொகையாக செலுத்திட நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவாகளின் கடிதம் ந.க.எண். 30322/2012/இ3 நாள். 15.02.2020ல் 28.02.2020க்குள் அனுப்பிட தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடாந்து மேற்படி செலவினத்தொகையினை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கும் மேலும் இச்செலவினத் தொகையினை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து வழங்கிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு

அலுவலக குறிப்பு..

1. மேற்படி தொகையினை வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தொகை ரூ.163,638/- வருவாய் மற்றும் மூலதனநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண். 213 அலுவலக்குறிப்பு ஏற்று அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..8

செங்கோட்டை நகராட்சி பகுதியில் அனைத்து தெருக்களிலும் பெடரல் வங்கி மூலமாக தெருவின் பெயர் பலகை வைத்து அனுமதி கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்படி வங்கி மூலமாக C.S.R. நிதி மூலமாக தெருவின் பெயர் வைத்து கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக்குறிப்பு..

மன்றம் மேற்படி வங்கியின் C.S.R. நிதியில் வங்கியின் மூலம் அனைத்து தெருக்களிலும் பெயர் பலகை வைக்க மன்றம் இசைவு வழங்கலாம்.

தீர்மானம் எண். 214 அனுமதி வழங்கப்பட்டது.

மன்றப்பொருள்..9

வார்டு மறுவரையறை ஆணையம், நகராட்சி நிர்வாக ஆணையரகம், மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர் ஆகியோர்களின் வழிகாட்டுதலின்படி இந்நகராட்சியால் சமர்ப்பிக்கப்பட்ட வார்டு மறுவரையறைக்கான கருத்துருவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டதை அடுத்து தமிழ்நாடு அரசிதழ் எண். 407 நாள் 14.12.2017ல் வார்டு மறுவரையறைக்கான தமிழக அரசின் ஒப்புதல் அளிக்கப்பட்டது குறித்து அறிக்கை வெளியிடப்பட்டது.

இதனை அடுத்து உள்ளாட்சி அமைப்புகளில் 9 மாவட்டங்களுக்கு வார்டு மறுவரையறை மேற்கொள்ளுதல் தொடர்பாக, தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்களால் நடத்தப்பட்ட 13.01.2020-ந் தேதிய காணொளி காட்சி கூட்டத்தில் சில அறிவுரைகள் வழங்கப்பட்டது. இதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் 575/2020/தேர்தல், நாள். 21.01.2020 –ல் வார்டு மறுவரையறையினை மறுஅறிவிக்கை செய்வது நிமித்தம் உரிய கருத்துரு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சி தலைவர் வழியாக சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு வார்டு மறுவரையறையினை மறுஅறிவிக்கை செய்தற்கான கருத்துரு உரிய வழிமுறையாக தமிழ்நாடு வார்டு மறுவரையறை ஆணையத்தின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்க மன்றம் ஒப்புதலுக்காக பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு..

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 1332/2017/பி1)

தீர்மானம் 215 ஒப்புதல் வழங்கப்பட்டது